வார இதழ்

# தேசியம்

THESIYAM ජාතිකය www.thesiyamnews.com

குரல் - 36 23.04.2023 (ஞாயிற்றுக்கிழமை) பக்கங்கள் 6 ஊக்குவிப்பு : ரூ.30.00

சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE, NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE +94 77 722 2259



# நெடுந்தீவு வயோதிபர்களை இதற்காகவே கொலை செய்தேன்!

## கொலையாளி அதிர்ச்சி வாக்குமூலம்

யாழ் நெடுந்தீவில் நேற்றைய தினம் (22-04-2023) வயோதிபர்கள் 5 பேரை கொடூரமாகக் கொலை செய்துவிட்டு தப்பி புங்குடுதீவில் தலைமறைவாகியிருந்த நபரை 24 மணித்தியாலத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி 07

# 25ம் திகதி மாபெரும் ஹர்த்தால்

## வடகிழக்கு ஸ்தம்பித்து நிற்பதை நாமனைவரும் உறுதிப்படுத்த வேண்டும்!

### தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறிகாந்தா வலியுறுத்து!!



ஹர்த்தால் காரணமாக உடல் உழைப்பை நம்பி வாழும் தொழிலாளர்கள் மற்றும் பல்துறை சார்ந்த பணியாளர்கள் உட்பட சகலருக்கும் ஏற்படக்கூடிய அசௌகரியங்களுக்கு நாம் வருந்துகின்றோம். இது நம் அனைவரினதும் பொதுவான போராட்டம் என்ற அடிப்படையில் இந்த பாதிப்புக்களை எமது மக்கள் சகித்துக்கொண்டு தமது பூரண ஆதரவை வெளிப்படுத்த வேண்டும் என பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

தொடர்ச்சி 07








மேலும் அரசியல் | தமிழர் வரலாறு | இலக்கியம் | மருத்துவம் | கவிதை | சிறுகதை | ஆன்மீகம் | சிறுவர் பகுதி | சினிமா | விளையாட்டு | ஈழத்து சினிமா

வார இதழ் தேசியம்
THESIYAM www.thesiyamnews.com

ஆசிரியர் பீடம்

5ம் வட்டாரம், வேலணை வடக்கு,
வேலணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



# “சிலை” சர்ச்சைகளும் தமிழர் முன் உள்ள தெரிவும்!!!

அண்மைக்காலமாக வடக்கு மாகாணத்தில் ““சிலை““ அரசியலும் சர்ச்சையும் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. இந்த சிலை சர்ச்சை என்பது பெரியார்களது சிலைகளை வைத்தோ அல்லது மகான்களின் சிலைகளை வைத்தோ அல்ல. மாறாக கடவுள் சிலைகளை வைத்துக்கொண்டு இந்த சர்ச்சைகள் உருவாக்கப்பட்டுக்கொண்டு வருகின்றன. 2009 இல் யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னரான கடந்த 14 வருடகாலமாக தமிழர் தேசத்தில் ஏதோவொரு வகையில் சர்ச்சைகளை உருவாக்குவதும் அங்குள்ள மக்களை நிம்மதியில்லாத வாழ்க்கைக்குள் தள்ளுவதிலும் சிங்கள அரசுகள் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டு வருவது புதிய விடயமல்ல. அந்த அடிப்படையில், தமிழர்களுக்கு எதிரான கலாசார இனப்படுகொலையை இலங்கையின் தற்போதைய அரசாங்கம் முன்னரை விடவும் திட்டமிட்டு விரிவுபடுத்தி வருவதுடன், தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு சாவு மணி அடித்து வருகிறது.

அந்த அடிப்படையில், யாழ்ப்பாணம் - பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் அண்மையில் வைக்கப்பட்ட அம்மன் சிலை விவகாரம் யாழ்ப்பாணத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. குறித்த சிலையை அகற்றுமாறு கோரி பொலிஸார் அண்மையில் நோட்டிஸ் ஒன்றை சிலைக்கு அருகில் ஒட்டியிருந்ததுடன்,பாதுகாப்புக்கும் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்தியிருந்தனர். இந்நிலையில் சிலையை அகற்றுமாறு கோரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு நேற்று யாழ். நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, இந்து அமைப்புக்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா, அகில இலங்கை இந்துமா மன்றம், நல்லூர் ஆதினம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உட்பட பல சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர். குறித்த வழக்கு தொடர்பில் பொலிஸாரின் வழக்கீடு தகைமை மற்றும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் தொடர்பில் கேள்விக்குட்படுத்தி சட்டத்தரணிகள் நீண்ட சமர்ப்பணங்களை முன்வைத்த அதேவேளை, எழுத்து மூல சமர்ப்பணங்களுக்காக வழக்கு எதிர்வரும் 04 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஆனால்,இந்த நீதிமன்றத்தின் கட்டளையை அரச இயந்திரம் நிச்சயமாக கவனத்தில் எடுக்கப்போவதில்லை. ஏற்கனவே இதே போல் பல கட்டளைகள், தீர்ப்புகள் கவனத்தில் எடுக்கப்படாத வரலாறுகள் தமிழர் முன் இருக்கின்றன.அந்த அடிப்படையில் இதற்கும் அதே நிலைமை தான். ஆனால், அரசாங்கத்தாலும் அரச தரப்பினராலும் தொடர்ந்தும் தமிழர் தேசத்தில் முன்னெடுக்கப்படும் கலாசார இனப்படுகொலை, மற்றும் மேற்படி அம்மன் சிலை விவகாரம் போன்றவற்றில் தமிழரின் எதிர்ப்புகள் அல்லது இவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் ஆரோக்கியமாக இருக்கிறதா என்பது தொடர்பில் சிந்திப்பது அவசியமாகும். இது வரை இவற்றுக்கு எதிராக ஒரு கூட்டு செயற்பாட்டையோ அல்லது ஒட்டுமொத்த தேசத்தையும் இணைத்துக்கொண்டு ஒரு தொடர் போராட்டத்தை முன்னெடுப்பதையோ அவதானிக்க முடியவில்லை.

குறிப்பாக தமிழர் தேசத்தில் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்படும் கலாசார இனப்படுகொலைகளை கண்டித்து இதுவரை புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழர்கள் ஒரு கண்டன ஆர்ப்பாட்டத்தையோ அல்லது எதிர்ப்பு போராட்டங்களையோ முன்னெடுத்ததாக இல்லை. யுத்தத்துக்கு பின்னர் தமிழர் தேசத்தின் விவகாரங்கள் சர்வதேச அரங்குகளில் பேசப்பட்டுவரும் நிலையில், இன்று முன்னெடுக்கப்படும் கலாசார படுகொலை தொடர்பில் எந்த பேச்சுக்களும் சர்வதேச அரங்கில் பேசப்படாமை, தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டு நிற்கும் சர்வதேசத்தின் மீதான வெறுமையையே காட்டிநிற்கிறது. இலங்கை அரசுகளால் எதனையும் தமிழ் மக்களால் பெறமுடியாது என்பதன் அடிப்படையிலேயே தமிழரின் விவகாரம் சர்வதேச சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இதனை பல தமிழ் தலைமைகளும் தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டுதான் சர்வதேசத்தை நாடியிருந்தார்கள். ஆனால், இன்று தமிழர் தேசத்தில் அரங்கேறும் கலாசார இனப்படுகொலை தொடர்பில் எந்தவொரு நாடும் வாய்திறக்கவில்லை. அதே போல், புலம்பெயர் தமிழர்களும் மௌனமாக இருக்கிறார்கள். அப்படியானால் தமிழர் தொடர்பான விவகாரங்கள் சர்வதேசத்தால் புறக்கணிக்கப்பட்டுவிட்டதா? என்ற கேள்வியும் எழாமல் இல்லை. ஆனால் தமிழர்கள் ஒரே ஒரு விடயத்தை மாத்திரம் கவனத்தில் கொள்ளவேண்டும். தமிழருக்கான தீர்வு தமிழ் மக்களின் கைகளிலேயே உள்ளது. தமிழர்களின் எழுச்சியே தமிழர் தேசத்தின் விடிவுக்கான பாதையை திறக்கும். தமிழ் மக்கள் மௌனமாக இருக்கும்வரை தமிழர் தேசத்தின் விடிவு கேள்விக்குரியதாகவே இருந்துகொண்டு இருக்கும்.

ஆசிரியர் ■ யாழ்ப்பாணம்

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தைத் தோற்கடிப்பதற்கு அணிதிரள வேண்டும்: சுரேந்திரன்



நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தைத் தோற்கடிப்பதற்கு எதிர்வரும் 25ஆம் திகதி அனைவரும் அணிதிரள வேண்டும் என ரெலோ ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றைய தினம் (22.04.2023) யாழ். தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற தமிழ் கட்சிகளின் போராட்ட அழைப்புத் தொடர்பான ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் 30 வருட காலமாகப் பயங்கரவாத சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது பெயர் மாற்றம் செய்து அதை விட மோசமான சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதிய பயங்கரவாத சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் மக்கள் வீதியில் கூடிப் பேசுவதும் அரசுக்கு எதிரான சதி முயற்சியாகப் பார்க்கப்பட்டு கைது செய்யப்படலாம். நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத சட்டம் தமிழ் மக்களை அதிகமாகப் பாதித்த நிலையில் புதிய சட்டம் நாட்டு மக்களையே பாதிக்கும் அபாயம் உள்ளது. நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை தெற்கில் வலுப்பெறு வருகின்ற நிலையில் புதிய சட்டமூலத்திற்கும் பெரும்பாலான எதிர்ப்புகள் எழுந்த வண்ண உள்ளன.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சனைகளை வெளிப்படுத்தும் முகமாக வடக்கு கிழக்கு முடங்கிய எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூரண நிர்வாக முடக்கலுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். எமது கோரிக்கைகளான வடக்கு கிழக்கு தமிழர் பகுதிகளில் இடம்பெறும் நில ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட வேண்டும், தமிழ் மக்களின் தொல்பொருள் சின்னங்கள் அழிக்கப்படுதல், திட்டமிட்ட பௌத்த மயமாக்கல் மற்றும் புதிய பயங்கரவாத எதிர்ப்பு ச் சட்டம் போன்றவற்றை அரசு நிறுத்த வேண்டும் .

ஆகவே தமிழ் மக்கள் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை தோற்கடிப்பதற்கும் தமிழ் மக்களின் பூர்வீக இடங்கள் அபகரிப்பதற்கு எதிராக அரசாங்கத்துக்குச் செய்தியைக் கூறுவதோடு சர்வதேசத்தின் பார்வையை ஈர்ப்பதற்கும் எதிர்வரும் 25ஆம் திகதி வடக்கு கிழக்கு தழுவிய பூரண நிர்வாக முடக்கலுக்கு பூரண ஆதரவை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்






















# சிங்களத்தால் ஆக்கிரமிக்கப்படும் தமிழர் மரபுரிமைகள்!!!

மனிதன் தான் வாழும் நிலத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான உறவென்பது அவனது அகப்புற வாழ்வுடன் பின்னிப் பிணைந்தது. ஒரு இனக்குழுமத்திற்கு தாம் பூர்வீகமாய் வாழ்ந்து வரும் நிலத்துடன் உள்ள தொடர்பானது வாழ்வுடன் பிரிக்க முடியாத பிணைப்பைக் கொண்டுள்ளது. தமிழர்களின் மரபுவழித் தாயகக் கோட்பாட்டை சிதைத்து இலங்கை கௌதம புத்தரால் சிங்களவர்களுக்கு அர்ப்பணிக்கபட்ட பூமி என்ற மகாவம்ச மாயாவாத சித்தாந்தத்தை நிலைநாட்டுவதற்காக இலங்கை முழுவதையும் சிங்களமயமாக்குதலை நோக்காகக் கொண்டு தமிழர் பாரம்பரிய நிலத்தில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களை பேரினவாத அரசாங்கம் 1949 முதல் இன்று வரை குடியமர்த்தி வருகின்றது. தமிழர் தாயகத்தில் வட, கிழக்கு பகுதியில் ஆக்கிரமிப்புக்கள் குடியேற்றங்கள் முந்தைய ஆட்சியாளர்கள் இருந்த காலத்தை விட ரணிலின் ஆட்சியில் அதிகரித்து காணப்படுகின்றது. தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக இராணுவம் பின்புலமாக இருந்து ஆக்கிரமிப்புக்களை செய்து வருகின்றது இவை கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகும்.

காலம் காலமாக வட, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கோடு பல சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதுடன் தமிழர்களின் மரபுரிமையை சிதைக்கும் நோக்குடன் திட்டமிட்ட பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளும் மத்திய அரச நிறுவனங்களின் பூரண அனுசரணையுடன் இடம் பெற்று வருவதும் இச்செயற்பாடுகளுக்கெதிராக தமிழ்மக்கள் போராடுவதும் வழமையான நிகழ்வுகளாகிப் போய்விட்டன. அந்தவகையில் ரணில் விக்கிரமசிங்க தனது 8 மாத கால ஆட்சியில் தமிழர் பகுதியில் ஏற்படுத்திய தமிழர் விரோத செயற்பாடுகள் அநேகம். அதன்படி, குருந்தூர் மலை ஆதி சிவன் கோவிலில் விகாரை கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றது, முல்லைத்தீவு மணற்கேணியில் தொன்மையான சைவ கோவில் அழிக்கப்பட்டு இருக்கின்றது, திருகோணமலை ராஜவந்தான் மலை கோவில் விக்கிரகங்கள் தோண்டியெறிப்பட்டு விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது, நெடுந்தீவு வெடியரசன் கோட்டை பௌத்த தொல்லியலாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றது, கன்னியா வெந்நீரூற்று அனுராதபுர கால தொல்லியல் என குறிப்பிடப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கின்றது. திருக்கோணேஸ்வரம் ஆலயம் 18 ஏக்கர் காணிக்குள் சுருக்கப்பட்டு இருக்கின்றது. மாதுறு ஓயா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மயிலத்தமடு மேய்ச்சல் தரை ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கின்றது. நொச்சியடி ஐயனார் ஆலய சூழல் தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு இருக்கின்றது. வவுனியா இராஜேந்திரகுளம் மற்றும் சூழ உள்ள பகுதிகளை தொல்பொருட் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு ,ருக்கின்றது. பாரம்பரிய மீன்பிடிக்கு ஏற்ற கடற்கரைகள் எல்லாம் கடலட்டை பண்ணைகள் என்கிற பெயரில் தொடர்ச்சியாக அபகரிக்கப்பட்டு ,ருக்கின்றது. மணலாற்றின் கற்தூண், அக்கரைவெளி, வண்ணாமடு, மணற்கேணி ஆகிய பகுதிகளிலேயே காணி அபகரிப்பு மற்றும் பௌத்தமயமாக்கல் என்பன நாள் தோறும் நடந்து வருகின்றன. மூதூர் கடற்கரை சேனை பகுதியில் பரக்கும்பர கடற்படை தளத்தினால் அபகரிக்கப்பட்ட 18 ஏக்கர் காணிகளின் உரிமையாளர்கள் 10 பேரை நான்காம் மாடிக்கு அழைத்து அச்சுறுத்தி இருக்கின்றார்கள். நாவற்குழி ஸ்ரீ சமித்தீ சுமண விகாரையில் புதிய கலசம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டு இருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட நல்லிணக்க முயற்சிகளின் தொடர்ச்சியாக, நிலாவரை கிணற்றுக்கு அருகில் பௌத்த அடையாளச் சின்னங்களை நிறுவ முயற்சிக்கின்றார்கள். ,ந்திய மீனவர்களுக்கு வடக்கு கடலில் அனுமதி அளிக்க முயற்சிக்கின்றார்கள். மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 26 இடங்களை தொல்லியல்சார் இடங்களாக அறி வித்து சுவீகரிக்க முயற்சிக்கின்றார்கள். 9,942 மக்களின் வாழ்வாதாரமான வலதுகரை காணிகளை மட்டக்களப்பில் அபகரிக்க பார்க்கின்றார்கள். சங்கானை மத்திய கலாச்சார நிலையத்தை தொல்பொருள் சிதைவுகள் என்கிற பெயரில் ஊடக ஆக்கிரமிக்க எத்தனிக்கின்றார்கள். வட்டுவாகல்

**போர் மௌனிக்கப்பட்ட நிலையில் தமிழர் அடையாளங்களை அழித்து, தமிழரின் இருப்பை இல்லாது செய்யும் நோக்குடன் ஆட்சியாளர்கள் செயற்பட்டு வருகின்றனர்.**

கோத்தபாய கடற்படை முகாம் காணிகளை நிரந்தரமாக அபகரிக்க முயற்சிகின்றார்கள். யாழ்ப்பாணத்தில் 68 இடங்க்ளில் இராணுவத்திற்காக நிலங்களை நிரந்தரமாக அபகரிக்க முயலுகின்றார்கள்.

தமிழர்களிடமிருந்து நிலப் பகுதியை குறைக்க வேண்டும் என்பதில் தென்னிலங்கை பாரிய திட்டத்தை அரங்கேற்றி வருகிறது. இவ்வாறான திட்டங்கள், நிலமற்ற சிங்களவர்களுக்கு நிலம் தரும் திட்டங்களாக அரசால் பரப்புரை செய்யப்பட்டாலும், காலங்காலமாக அப்பிரதேசங்களிலேயே வாழ்ந்து வரும் தமிழர்களின் உரிமைகளை, கருத்துகளைப் பொருட்படுத்துவதேயில்லை என்பது தான், திலுள்ள பெரும் குறையாகும். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது பெரும்பான்மை மக்களின் பலவந்தமான குடியேற்றங்களே! இருந்தாலும் இதனை ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கங்கள் தயாரில்லை என்பதே கசப்பான உண்மை. இலங்கை ஒரு ஜனநாயக நாடு. ஆனால், அந்த ஜனநாயகத்தை தான் நாட்டில் தமிழ் மக்கள் இத்தனை வருட காலமாக தேடி வருகின்றனர். அத்துடன் பேரினவாத அரசு இலங்கையில் தமிழ் மக்களின் நிலங்கள் சிங்களமயமாக்கப்படுவதையும் ஆக்கிரமிக்கப்படுவதையும் தடுக்க எந்தவிதமான நடவடிக்கையையும் எடுப்பதில்லை. அதற்கு ஆதரவு வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்தி, வரப்பிரசாதங்களையும் வழங்குவதே தமிழ் மக்களை கவலைக்குள் தள்ளிவிடுகிறது. இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்து பல வருடங்கள் ஆகியும் இன்னமும் பெரும்பான்மை மக்களுக்கு சாதகமானதாகவே அரசு செயற்படுவதை குறித்து பல சந்தர்ப்பங்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டாலும் இதுவரை எந்தவித பயனும் தமிழ் மக்களுக்கு கிடைக்கப்பெறவில்லை.

வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியாகப் பிரிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் அமைவாகவே மகாவலி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சுமார் பத்து லட்சம் காணிகளில் தமிழர்கள் எவருக்கும் ஒரு துண்டு காணியேனும் வழங்கப்படவில்லை. மகாவலி டு வலயத்தில் உள்ளடங்கும் முல்லைத்தீவு மாவட்டம் வெலிஓயா பகுதியில் முழுதாக சிங்கள மக்களுக்கே குடியேற்ற திட்டம் வழங்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் 14 ஆயிரம் பேர் காணியற்றவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு இன்னும் காணிகள் வழங்கப்படவில்லை. இவ்வாறு தமிழர் புராதன காணிகளை அபகரிப்பதில் தொல்லியல் திணைக்களம், வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் என்பன மிக வேகமாகச் செயற்படுகின்றன. அதே வேளை, மகாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பிரதேச செயலகமோ மாவட்ட செயலகமோ கேள்வி கேட்க முடியாத அளவுக்கு அதிகாரம் உள்ள சபையாக காணப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் மூலம், தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்கள், தரவைகள், வழிபாட்டு இடங்களை எல்லாம் தொல்லியல் வன ஒதுக்கப் பகுதி என கையகப்படுத்தி, தமிழரை காணி அற்றவர்களாக்குவதே இந்த சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டம்.

மனிதன் தான் வாழும் நிலத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான உறவென்பது அவனது அகப்புற வாழ்வுடன் பின்னிப் பிணைந்தது. ஒரு இனக்குழுமத்திற்கு தாம் பூர்வீகமாய் வாழ்ந்து வரும் நிலத்துடன் உள்ள தொடர்பானது வாழ்வுடன் பிரிக்க முடியாத பிணைப்பைக் கொண்டுள்ளது. தமிழர்களின் மரபுவழித் தாயகக் கோட்பாட்டை சிதைத்து இலங்கை கௌதம புத்தரால் சிங்களவர்களுக்கு அர்ப்பணிக்கபட்ட பூமி என்ற மகாவம்ச மாயாவாத சித்தாந்தத்தை நிலைநாட்டுவதற்காக இலங்கை முழுவதையும் சிங்களமயமாக்குதலை நோக்காகக் கொண்டு தமிழர் பாரம்பரிய நிலத்தில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களை பேரினவாத அரசாங்கம் 1949 முதல் இன்று வரை குடியமர்த்தி வருகின்றது. தமிழர் தாயகத்தில் வட, கிழக்கு பகுதியில் ஆக்கிரமிப்புக்கள் குடியேற்றங்கள் முந்தைய ஆட்சியாளர்கள் இருந்த காலத்தை விட ரணிலின் ஆட்சியில் அதிகரித்து காணப்படுகின்றது. தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக இராணுவம் பின்புலமாக இருந்து ஆக்கிரமிப்புக்களை செய்து வருகின்றது இவை கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகும்.

காலம் காலமாக வட, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கோடு பல சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதுடன் தமிழர்களின் மரபுரிமையை சிதைக்கும் நோக்குடன் திட்டமிட்ட பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளும் மத்திய அரச நிறுவனங்களின் பூரண அனுசரணையுடன் இடம் பெற்று வருவதும் இச்செயற்பாடுகளுக்கெதிராக தமிழ்மக்கள் போராடுவதும் வழமையான நிகழ்வுகளாகிப் போய்விட்டன. அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்க தனது 8 மாத கால ஆட்சியில் தமிழர் பகுதியில் ஏற்படுத்திய தமிழர் விரோத செயற்பாடுகள் அநேகம். அதன்படி, குருந்தூர்மலை ஆதி சிவன் கோவிலில் விகாரை கட்டி முடிக்கப் பட்டு இருக்கின்றது, முல்லைத்தீவு மணற் கேணியில் தொன்மையான சைவ கோவில் அழிக்கப்பட்டு இருக்கின்றது, திருகோணமலை ராஜவந்தான் மலை கோவில் விக் கிரகங்கள் தோண்டியெறிப்பட்டு விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது, நெடுந்தீவு வெடியரசன் கோட்டை பௌத்த தொல்லிய லாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றது, கன் னியா வெந்நீரூற்று அனுராதபுர கால தொல் லியல் என குறிப்பிடப்பட்டு ஆக்கிரமிக்கப் பட்டு இருக்கின்றது. திருக்கோணேஸ்வரம் ஆலயம் 18 ஏக்கர் காணிக்குள் சுருக்கப்பட்டு இருக்கின்றது. மாதுறு ஓயா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மயிலத்தமடு மேய்ச்சல் தரை ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கின்றது. நொச்சி யடி ஐயனார் ஆலய சூழல் தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு இருக்கின்றது. வவு னியா இராஜேந்திரகுளம் மற்றும் சூழ உள்ள பகுதிகளை தொல்பொருட் திணைக் களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப் பட்டு இருக்கின்றது. பாரம்பரிய மீன்பிடிக்கு ஏற்ற கடற்கரைகள் எல்லாம் கடலட்டை பண் ணைகள் என்கிற பெயரில் தொடர்ச்சியாக அபகரிக்கப்பட்டு இருக்கின்றது. மணலாற் றின் கற்றூண், அக்கரைவெளி, வண்ணா மடு, மணற்கேணி ஆகிய பகுதிகளிலேயே காணி அபகரிப்பு மற்றும் பௌத்தமயமாக் கல் என்பன நாள் தோறும் நடந்து வருகின் றன. மூதூர் கடற்கரைசேனை பகுதியில் பரக்கும்பர கடற்படைதளத்தினால் அபகரிக் கப்பட்ட 18 ஏக்கர் காணிகளின் உரிமை யாளர்கள் 10 பேரை நான்காம் மாடிக்கு அழைத்து அச்சுறுத்தி இருக்கின் றார்கள். நாவற்குழி ஸ்ரீ சமித்தீ சுமண விகாரையில் புதிய கலசம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டு இருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட நல்லிணக்க முயற்சிகளின் தொடர்ச்சியாக, நிலாவரை கிணற்றுக்கு அருகில் பௌத்த அடையாளச் சின்னங்களை நிறுவ முயற்சிக்கின்றார்கள். .ந்திய மீனவர்களுக்கு வடக்கு கடலில் அனுமதி அளிக்க முயற்சிக்கின்றார்கள். மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 26 இடங்களை தொல்லியல்சார் இடங்களாக அறிவித்து சுவீகரிக்க முயற்சிக்கின்றார்கள். 9,942 மக்களின் வாழ்வாதாரமான வலதுகரை காணிகளை மட்டக்களப்பில் அபகரிக்க பார்க்கின்றார்கள். சாங்கானை மத்திய கலாச்சார நிலையத்தை தொல்பொருள் சிதைவுகள் என்கிற பெயரில் ஊடக ஆக்கிரமிக்க எத்தனிக்கின்றார்கள். வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாம் காணிகளை நிரந்தரமாக அபகரிக்க முயற்சிகின்றார்கள். யாழ்ப்பாணத்தில் 68 இடங்களில் .ராணுவத்திற்காக நிலங்களை நிரந்தரமாக அபகரிக்க முயலுகின்றார்கள்.

தமிழர்களிடமிருந்து நிலப் பகுதியை குறைக்க வேண்டும் என்பதில் தென்னிலங்கை பாரிய திட்டத்தை அரங்கேற்றி வருகிறது. இவ்வாறான திட்டங்கள், நிலமற்ற சிங்களவர்களுக்கு நிலம் தரும் திட்டங்களாக அரசால் பரப்புரை செய்யப்பட்டாலும், காலங்காலமாக அப்பிரதேசங்களிலேயே வாழ்ந்துவரும் தமிழர்களின் உரிமைகளை, கருத்துகளைப் பொருட்படுத்துவதேயில்லை என்பதுதான் இதிலுள்ள பெரும் குறையாகும். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது பெரும்பான்மை மக்களின் பலவந்தமான குடியேற்றங்களே! இருந்தாலும் இதனை ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கங்கள் தயாரில்லை என்பதே கசப்பான உண்மை. இலங்கை ஒரு ஜனநாயக நாடு. ஆனால், அந்த ஜனநாயகத்தை தான் நாட்டில் தமிழ் மக்கள் இத்தனை வருட காலமாக தேடி வருகின்றனர். அத்துடன் பேரினவாத அரசு இலங்கையில் தமிழ் மக்களின் நிலங்கள் சிங்களமயமாக்கப்படுவதையும் ஆக்கிரமிக்கப்படுவதையும் தடுக்க எந்தவிதமான நடவடிக்கையையும் எடுப்பதில்லை. அதற்கு ஆதரவு வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்தி, வரப்பிரசாதங்களையும் வழங்குவதே தமிழ் மக்களை கவலைக்குள் தள்ளிவிடுகிறது. இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிந்து பல வருடங்கள் ஆகியும் இன்னமும் பெரும்பான்மை மக்களுக்கு சாதகமானதாகவே அரசு செயற்படுவதை குறித்து பல சந்தர்ப்பங்க

ளிலும் பிரஸ்தாபிக்கப்பட்டாலும் இதுவரை எந்தவித பயனும் தமிழ் மக்களுக்கு கிடைக்கப்பெறவில்லை.

வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியாகப் பிரிக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் அமைவாகவே மகாவலி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சுமார் பத்து லட்சம் காணிகளில் தமிழர்கள் எவருக்கும் ஒரு துண்டு காணியேனும் வழங்கப்படவில்லை. மகாவலி டு வலயத்தில் உள்ளடங்கும் முல்லைத்தீவு மாவட்டம் வெலிஓயா பகுதியில் முழுதாக சிங்கள மக்களுக்கே குடியேற்ற திட்டம் வழங்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் 14 ஆயிரம் பேர் காணியற்றவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு இன்னும் காணிகள் வழங்கப்படவில்லை. இவ்வாறு தமிழர் புராதன காணிகளை அபகரிப்பதில் தொல்லியல் திணைக்களம், வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன மிக வேகமாகச் செயற்படுகின்றன. அதேவேளை, மகாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பிரதேச செயலகமோ மாவட்ட செயலகமோ கேள்வி கேட்க முடியாத அளவுக்கு அதிகாரம் உள்ள சபையாக காணப்படுகிறது. ,வ்வாறான செயற்பாடுகள் மூலம், தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்கள், தரவைகள், வழிபாட்டு இடங்களை எல்லாம் தொல்லியல் வன ஒதுக்கப் பகுதி என கையகப்படுத்தி, தமிழரை காணி அற்றவர்களாக்குவதே இந்த சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டம்.

இலங்கையில் பல தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்த காலப்பகுதியில் கூட தமிழர்களுடைய புராதன அடையாளங்கள் மற்றும் வரலாற்று நிலங்கள் பாதுகாக்கப்பட்ட நிலையில், தற்போது போர் மௌனிக்கப்பட்ட நிலையில் தமிழர் அடையாளங்களை அழித்து, தமிழரின் இருப்பை இல்லாது செய்யும் நோக்குடன் ஆட்சியாளர்கள் செயற்பட்டு வருகின்றனர். அதேவேளை, இந்து சமயம் பல்வேறு வழிகளிலும் நசுக்கப்பட்டு வரும் நிலையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு தயக்கம் காட்டுகின்றனர். ஆனால், மட்டக்களப்பை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் இருக்கும்போது ,ந்து ஆலயங்கள் தொடர்பில் அதிகம் பேசுவார். இந்து சமயத்தில் இருக்கின்ற பல்வேறு அமைப்புகள் ஒன்றிணைந்து வலுவான ஒரு அமைப்பின் கீழ் செயல்படும்போது தமிழ் மக்களின் நிலங்களையும் இந்து சமயத்தையும் பாதுகாக்க முடியும் எனவும் அவர் தொடர்ந்தும் கருத்துக்களைத் தெரிவித்து வந்தார். ஆனால் இன்று உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழர் பூர்வீகம் அழிக்கப்பட்டு சிதைக்கப்பட்டு வரும் நிலையிலும் வாய் மூடி மௌனிகளாகவே இருக்கின்றனர். 2009 யுத்தத்தின் இறுதியில் நடந்தவற்றை விசாரணை செய்யக் கோரும் சர்வதேசம் ,லங்கை அரசு தனது நாட்டு மக்கள் மீது புரிந்த இனப்படுகொலை குறித்து மௌனம் சாதிக்கிறது. 1984 காலப் பகுதியில் மணலாற்றில் நடைபெற்ற தமிழினப் படுகொலைகளுக்கோ பின்னர் நடந்த தமிழினப் படுகொலைக்கோ இலங்கையில் இதுவரை விசாரணை நடத்தப்படவும் இல்லை நீதி வழங்கப்படவும் இல்லை. ஆனால் தமிழினத்தை தமிழ் மக்களின் நிலத்தைப் இன அழிப்பிலிருந்து பாதுகாக்க ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்களை விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறி இலங்கையரசாங்கத்துடன் இணைந்து அழித்த கொடுஞ்செயலுக்கு சர்வதேசமும் சிங்கள பேரினவாத அரசிற்கு துணை நின்றது. இவ் எல்லா ஆக்கிரமிப்பு திட்டங்களையும் உள்ளடக்கியதான திட்டத்திற்கு நம் வட, கிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் துணை போய்விட்டார்கள். உண்மையிலேயே ஆட்சியைத் தக்க வைத்துள்ள அரசின் தமிழர் விரோத செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுகின்ற போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தட்டிக்கேட்டு தடுத்து நிறுத்த முடியாது தடுமாறுவது தமிழினத்தின் சாபக்கேடு.

ரௌத்திரன் ■ கட்டுரை - யாழ்ப்பாணம்

## நிர்வாக முடக்கலுக்கு ஆதரவு தருமாறு

# ரெலோ இளைஞர் அணி அழைப்பு!



வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தழுவிய முழுமையான நிர்வாக முடக்கலுக்கு மக்கள் அனைவரையும் ஆதரவு வழங்குமாறு தேசியக் கட்சியாகிய தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) இளைஞர் அணி தலைவர் சபா குகதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

சிங்கள பேரினவாத அரசின் தொடர்ச்சியான அடக்கு முறையை தொடர்கிறது என்பதை முழு உலகிற்கும் அனைத்து மக்களின் வெளிப்பாடாக வெளிப்படுத்த இந்த பொது முடக்கத்திற்கு உரிமையுடன் ஒத்துழைப்பு தருமாறு அனைவரிடமும் வேண்டுகின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள பேரினவாத அரசாங்கம் தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளும் சட்டரீதியற்ற காணி அபகரிப்பு, பௌத்த மயமாக்கல், சைவக் கோவில்கள் அழிப்பு, தொல்லியல்களை மாற்றியமைத்தல் போன்ற செயற்பாடுகளை நிறுத்தக் கோரியும் பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதுடன் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை மீளப் பெறுமாறும் கோரியும் குறிப்பிட்ட நிர்வாக முடக்கலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தமிழர் தாயகமான வடக்குகிழக்கு மாகாணங்கள் தழுவிய முழுமையான நிர்வாக முடக்கலுக்கு அனைவரையும் ஒத்துழைப்பு தருமாறு வடகிழக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளும் சமூக மற்றும் மத அமைப்புக்களும் கூட்டாக முடிவெடுத்து அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# வடக்கு மற்றும் கிழக்கில் ஹர்த்தால்!

## புலம்பெயர் அமைப்புக்கள் ஒத்துழைப்பு



எதிர்வரும் 25ஆம் திகதி வடக்கு மற்றும் கிழக்கில் நடைபெறவிருக்கும் நிர்வாக முடக்கலுக்கு எமது பூரண ஆதரவை நாம் வழங்கிவோம் என பிரான்ஸ் தமிழர் மனிதர் உரிமை மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் செய்திக்குறிப்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் தெரிவிக்கையில், புலம்பெயர் அமைப்புக்கள் எந்த வேறுபாடுகளுமின்றி எதிர்வரும் 25ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள நிர்வாக முடக்கலுக்கு ஆதரவை தெரிவிக்கும்.

இந்நிலையில் இந்த நிர்வாக முடக்கலை முன்னின்று நடத்தும் அனைத்து கட்சிகள் மற்றும் சங்கங்களுக்கு சிநேகபூரமான நட்பையும், ஆதரவையும் தெரிவிப்போம்.

நாட்டில் வாழும் எமது உறவுகள் அனைவரும் பாகுபாடுமின்றி இந்த நிர்வாக முடக்களில் கலந்துகொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளது.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# யாழில் 14 வயது காதலியை

## வன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய காதலன்

14 வயதான சிறுமியை வன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய 21 வயதான காதலன் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் யாழ்ப்பாணம், கெருடாவில் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வல்வெட்டித்துறை பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் 21 வயதான இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கெருடாவில் பகுதியை சேர்ந்த 14 வயதான சிறுமியுடன் காதல் வசப்பட்ட 21 வயதான இளைஞன் பல சமயங்களில் சிறுமியை வல்லுறவுக்குள்ளாக்கியுள்ளார்.

இளைஞன் கைது செய்யப்பட்டதுடன் சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# இனங்களை அடக்குவதற்காக கொண்டுவரப்படும்

# எந்த சட்டத்தையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்க்கும்

## - நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் -



இந்த நாட்டிலே தமிழர்களை இல்லாது ஒழிப்பதற்காக 40 வருடத்துக்கு முன் கொண்டுவரப்பட்டது தான் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் எனவே இனங்களை அடக்குவதற்காக கொண்டுவரப்படும் எந்த சட்டமாக இருந்தாலும் அதனை முற்று முழுதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்க்கும் என தமிழரசு கட்சி அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

நாவிதன்வெளியில் அமைந்துள்ள நா.உறுப்பினரது காரியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (23) இடம்பெற்ற ஊடக மாநாட்டிலே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களை இல்லாதொழிப்பதற்காக கொண்டுவரப்பட்டது தான் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் எங்களுடைய இனமே முற்று முழுதாக அழிக்கப்பட்ட சட்டம் இந்த சட்டத்தினால் நாட்டிலே இலச்சக்காக்கான மக்கள் வாழமுடியாமல் ஐரோப்ப நாடுகள் மற்றும் இந்தியாவில் தஞ்சமடைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் இதற்கு எல்லாம் அடித்தளமாக இருந்தது இந்த பயங்கரவாத தடைச்சட்டம் எனவே இந்த 40 வருட யுத்தத்திலே பல இலட்சக்கணக்கான உயிர்களையும் சொத்துக்களையும் இழந்தவர்கள் நாங்கள் அந்த வலியை உணர்ந்தவர்களும் நாங்கள் அதன் அடிப்படையில் நீதி அமைச்சரால் எதிர்வரும் 25 ம் திகதி நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்படவுள்ள உத்தேச திருத்த சட்டத்தில் பல பாதிப்புக்கள் இருக்கின்றது எனவே இந்த சட்டத்தை எதிர்ப்போம் ஏன் என்றால் இந்த தடைச்சட்டத்தால் தமிழராகிய நாங்கள் எங்களுடைய உடமைகள் உறவுகள் என்ற அடிப்படையில் சொல்லமுடியாதளவு பாதிக்கப்பட்டவர்கள் என்றதனால் இதனை எதிர்ப்போம்.

ஒரு இனத்தை இன்று சர்வசாதாரனமாக நடாத்தப்பட்ட 69 இலட்சம் வாக்குகளை பெற்ற ஜனாதிபதியை விரட்டுவதற்காக முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தை அடக்கியபோது தான் சிங்கள மக்களுக்கு ஞானம் பிறந்துள்ளது அவர்களுடன் ஏனைய சகோதர இனங்கள் செயற்பட்டிருந்தாலும் இந்த நாட்டிலே வாழும் பெரும்பான்மை சமூகத்துக்கு இப்போது தான் இந்த பயங்கரவாத தடை சட்டத்தின் மூலம் இருக்கின்ற பாதிப்புக்கள் தெரிய வருகின்றது எனவே இனங்களை அழிக்கும் எந்த சட்டம் வந்தாலும் நாங்கள் அதனை எதிர்ப்போம். என்றார்.

உள்ளூர் செய்திகள்
கனகராசா சரவணன் - அம்பாறை

# அவமரியாதை செய்யப்பட்ட யாழ். ஊடகவியலாளர்கள்!

# அசிங்கமாக நடந்துகொண்ட பெண்...



யாழ்.பல்கலைக்கழகத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வாழ்க்கை வரலாற்று ஆய்வு நூல் வெளியீட்டு விழாவில் தன்னை நிகழ்வு ஏற்பாடடாளர் என அடையாளப்படுத்திய பெண் ஒருவர் ஊடகங்களை சபையில் இருந்து வெளியேறுமாறு கூச்சலிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வரலாற்று ஆய்வு நூல் வெளியீட்டு விழா இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வுக்கு ஊடகவியலாளர்களும் அழைக்கப்பட்ட நிலையில் திடீரென அங்கு நின்ற பெண் ஒருவர் ஊடகவியலாளர்களிடம் அடையாள அட்டையை காண்பிக்குமாறு அதிகார தொனியில் மிக அநாகரீகமாக நடந்து கொண்டார்.

இந்நிலையில் சில ஊடகவியலாளர்கள் நாங்கள் அடையாள அட்டையை காட்டுவதில் பிரச்சனையில்லை நீங்கள் யார் என்பதை முதலில் கூற முடியுமா என கேள்வி எழுப்ப நீங்கள் வெளியேறலாம் என குறித்த பெண்மணி கடுந்தொனியில் கத்தினார்.

இவை அனைத்தையும் நிகழ்வின் ஒழுங்கமைப்பாளர்கள் பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்த நிலையில் சபையிலிருந்த 10க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் சபையிலிருந்து வெளியேறினர்.

அதன் பின் ஏற்பாட்டாளர்கள் சிலர் ஊடகவியலாளர்களை அணுகி நடந்த சம்பவத்துக்கு மன்னிப்புக் கோரியதுடன் சாட்டுப்போக்கான காரணங்களை கூறி நிகழ்வுக்கு வருமாறு கூறினர். எனினும் ஊடகவியலாளர்கள் சபையிலிருந்து வெளியேறிவிட்டனர்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்





விளம்பர தொடர்புகளுக்கு
021 221 7557
Mobile : +94 76 567 3339

இதேவேளை கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரான கொலையாளியிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டபோது அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

“அவர்களின் வீட்டில் தங்கியிருந்தேன். எனக்கு பணம் தேவை என்பதனால் அவர்கள் அணிந்திருந்த நகைகளை அபகரிக்க முடிவெடுத்தேன். தனியாக நகைகளை கொள்ளையிட்டால் பிடித்துவிடுவார்கள், சம்பவத்தை திசை திருப்பவே அனைவரையும் கொலை செய்தேன்” என்று கைது செய்யப்பட்டவர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.



சந்தேக நபரிடமிருந்து 26 தங்கப் பவுண் நகைகள், ஆடைகள் மற்றும் அலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

நெடுந்தீவு மாவிலி இறங்குதுறையை அண்டிய 12ஆம் வட்டாரத்தில் கடற்படை முகாமுக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் இருந்து வெட்டுக்காயங்களுடன் சடலங்கள் மீட்கப்பட்டன.

100 வயது மூதாட்டி ஒருவர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.




சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுல செனரத்தின் கட்டளையில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் விஷாந்தின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பொலிஸ் குழுவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நெடுந்தீவில் நடமாடிவிட்டு நேற்றுக் காலை அங்கிருந்து வெளியேறிச் சென்ற நபரை புங்குடுதீவில் வைத்து நேற்றிரவு கைது செய்தனர்.

ஜேர்மனியில் கொலை முயற்சி வழக்கொன்றில் குற்றவாளியாகக் கண்டறிந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டு 51 வயது நபரே கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து அதிகளவு தங்கநகைகள் கைப்பற்றப்பட்டன.



அதுதொடர்பில் விசாரணை மேற்கொண்டபோதே சந்தேக நபர் தானே கொலை செய்ததாக ஒப்புக்கொண்டார். “நான் நெடுந்தீவு வந்தால் குறித்த வயோதிபர்களின் வீட்டில் தான் தங்கிச் செல்வேன். அதுபோன்று கடந்த சில தினங்களுக்கு முன் வந்து தங்கியிருந்தேன். அங்கு வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர்கள் நகைகள் அணிந்திருந்தனர்.

அனைவரது நகைகளையும் அபகரித்து விற்பனை செய்து வரும் பணத்தில் கடவுச்சீட்டு பெற்று நான் மீளவும் ஜேர்மனிக்கு செல்ல திட்டமிட்டேன்.

அதனால் நேற்று அதிகாலை 4.30 பின்னர் நித்திரையிலிருந்த அனைவரையும் கொலை செய்துவிட்டு நகைகளை எடுத்துக் கொண்டு தப்பிக்க எண்ணினேன்.

நகைகளை மட்டும் அபகரித்துச் சென்றால் பொலிஸார் எளிதில் பிடித்துவிடுவார்கள், அதனால் பொலிஸ் விசாரணையை திசை திருப்ப அனைவரையும் கொலை செய்தேன்” என்று சந்தேக நபர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரை நெடுந்தீவுக்கு அழைத்துச் சென்று ஏனைய சான்றுப்பொருள்களை மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். சந்தேக நபர் இன்று மாலை ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளார்.

உள்ளூர் செய்திகள் ■
தொடர்ச்சி - யாழ்ப்பாணம்

எதிர்வரும் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை வடகிழக்கு மாகாணங்களில் முன்னேடுக்கப்படவுள்ள ஹர்த்தாலை முழு வெற்றியீட்ட வைப்பது எமது மக்கள் அனைவரினதும் உயரிய கடமை என்பதை தெரிவித்தக் கொள்ள விரும்புகின்றோம் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறிகாந்தா அவர்களின் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த ஹர்த்தால் இரண்டு முக்கியமான விடயங்களை மையப்படுத்தி முன்னேடுக்கப்படுகின்றது. ஒன்று பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்ற அரசாங்கத்தின் அராஜக திட்டத்தை தோற்கடிப்பது. மற்றயது தமிழ் மக்களின் மரபுவழி தாயகமான வட கிழக்கு மாகாணங்களில் எமது வரலாற்றுப் பாரம்பரியத்தையும், தொன்மையையும் சிதைக்கும் நோக்கத்துடன் ஆலயங்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவது என்பதாகும்.

இந்த இரண்டு ஆபத்துக்களையும் எதிர்த்து தோற்கடிப்பதைத் தவிர எமக்கு வேறு வழி கிடையாது.


என். சிறிகாந்தா
தலைவர் - தமிழ்த் தேசியக் கட்சி

உரிமை உணர்வு கொண்ட சமூகம் என்ற அடிப்படையில் நாம் இதனை செய்தாக வேண்டும்.

எமது உறுதியான எதிர்ப்பை சர்வதேசம் உணர்ந்து கொள்ளக்கூடிய விதத்தில் வெளி ப்படுத்துவதே இப்போது உடனடியாக நாம் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கையாகும்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையே ஓர் பூரண ஹர்த்தாலாக முன்னேடுக்கப்படுகின்றது. இந்த ஹர்த்தால் வெற்றிபெற நாம் அனை வரும் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் கட்டுப்பாடாகவும் எதிர்வரும் 25ம் திகதி செயற்பட வேண்டும்.

எமது வடகிழக்கு மாகாணங்களில் வர்த்தக நிலையங்களை அடைத்து போக்குவரத்துக் களை நிறுத்தி, கல்வி நடவடிக்கைகளை கைவிட்டு ஒட்டு மொத்தமாக எமது பிரதேசம் ஸ்தம்பித்து நிற்பதை நாமனைவரும் உறுதி ப்படுத்த வேண்டும்.
இந்த அமைதிவழிப் போராட்டத்தில் சமூகத்தின் சகல தரப்பினரும் பங்கேற்க வேண்டும்.

வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், பணியாளர்கள், போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள், பணியாளர்கள், முச்சக்கரவண்டி சாரதிகள், சந்தை வர்த்தகர்கள் பலதுறை சார்ந்த தொழிலாளர்கள், மாணவர்கள் என அனைவரும் தமது வழக்கமான பணிகளை நிறுத்தி தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என உரிமையுடன் அனைவரையும் கேட்கின்றோம்.

ஹர்த்தால் காரணமாக உடல் உழைப்பை நம்பி வாழும் தொழிலாளர்கள் மற்றும் பல்துறை சார்ந்த பணியாளர்கள் உட்பட சகலருக்கும் ஏற்படக்கூடிய அசௌகரியங்களுக்கு நாம் வருந்துகின்றோம். இது நம் அனைவரினதும் பொதுவான போராட்டம் என்ற அடிப்படையில் இந்த பாதிப்புக்களை எமது மக்கள் சகித்துக்கொண்டு தமது பூரண ஆதரவை வெளிப்படுத்த வேண்டும் என பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

உள்ளூர் செய்திகள் ■
தொடர்ச்சி - யாழ்ப்பாணம்